[திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்]

நாங்கள் மத்திய அரசாங்கத்திற்கு எடுத்து வைப்போம். விடப்பட்டிருக்கிற பகுதியை, இந்த ஆண்டு சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்போம்.

(44) சேலம், தர்மபுரி மாவடங்களில் நோயினால் கால்நடைகள் பாதிக்கப்படுவது.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''சேலம், தர்மபுரி ஆகிய மாவட்டங்களில் பல பகுதிகளிலுள்ள கால்நடைகளை எதிர்பாராத வகையில் தாக்கியுள்ள இனந்தெரியாத நோயின் காரணமாக அப்பகுதியில் கால்நடைகளின் இழப்பு எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால் அப்பகுதி வாழ் விவசாயிகளிடையே ஏற்பட்டுள்ள கவலை குறித்த'' அவசரப் பொது முக்கியத் துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு முதல் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(பதில் இல்லை.)

(45) தென் ஆற்காடு மாவட்டத்தில் பால் உற்பத்தியாளர்கள் ஒன்றிய பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கும் ஊதியத் தொகை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் எஸ். சிவராமன், எஸ். சிவராஜ் ஆகியோர் ஒரே பொருள் குறித்த கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு முதல் அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. சு. சிவராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தென்னாற்காடு மாவட்டத்தில் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்களில் ஒன்றியத்திலிருந்து பால் உற்பத்தி யாளர்களுக்குக் கிடைக்க வேண்டிய ஊதியத் தொகை கிடைக்கப்பெறாததால் அவர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு முதல் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(பதில் இல்லை.)

(46) நீலகிரி மாவட்டத்தில் பருவ மழை தவறியதால் விவசாயப் பணிகள் பாதிக்கப்பட்டிருப்பது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. உச்சி அவர்கள் '' நீலகிரி மாவட்டம், கூடலூர், உதகை, கோத்தகிரி